

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.9.2024) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், தஞ்சாவூர் மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்களை திறந்து வைத்து, அப்பூங்கா கட்டடங்களில் நிறுவனங்களுக்கு தள ஒதுக்கீட்டுக்கான ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.9.2024) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் கூட்டுறவுத் துறை சார்பில் 15 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் சாலிகிராமம் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், பூங்கா நகர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மற்றும் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர் நா.சுப்பையன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திருமதி ப.காயத்ரி கிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவாரூர் சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய நாகை நாடாளுமன்றத் தொகுதியில் இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வை. செல்வராஜ் எம்.பி., திருவாரூர் ஒன்றிய, நகரப் பகுதிகளில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே கலைவாணன் எம்.எல்.ஏ. , ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ.தேவா, நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் இந்திய கூட்டணி நிர்வாகிகளும் இந்த நன்றி அறிவிப்பு பேரணியில் பங்கேற்றனர்.

## ‘ஒரே நாடு – ஒரே தேர்தல்’ என்ற முழக்கத்தைத் தடுத்து நிறுத்தும்

# ஆற்றலும் சக்தியும் மாநில சுயாட்சிக்கே உண்டு!

இந்திய அரசியல் சூழ்நிலைகளையும், மாற்றங்களையும் ஒன்றிய அரசின் செயல்திட்டங்களையும், கூர்மையாகக் கவனித்து, ஆய்வுசெய்து 17.09.2024 ம் நாள் முப்பெருவிழாவில் நிறைவுரையாற்றிய முதல்வர், மக்களுக்கான மாநில உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்துவேன் என்பதை வலியுறுத்தினார். அரசியல் சட்டம் இன்று வழங்கியிருக்கின்ற அதிகாரங்களைச் சரியாகவும், முறையாகவும் செயல்படுத்தி, இந்திய ஒன்றியத்தில் வளர்ச்சி பெற்ற மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கியிருக்கிறோம். இனி மாநிலசுயாட்சியின் மூலம், மக்களின் மகிழ்ச்சிகரமான வாழ்விற்கும், வளர்ச்சிக்குமான, அதிகாரங்கள் மாநிலங்களுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படுமானால், தமிழ்நாட்டின் வளர்ச்சியின் எல்லையை வரலாற்றுச் சாதனையாக மாற்றுவோம் என உறுதிபடத் தெரிவித்தார்.

ஏற்கனவே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாக மாநிலசுயாட்சியை ஆக்கப்பூர்வமாகச் செயல்படுத்த நீதிபதி ராஜமன்னார் தலைமையில் குழு அமைத்தார். அந்தக் குழு வழங்கிய அறிக்கையின் அடிப்படையில், முரசொலி மாறன் தலைமையிலான குழு அதற்கான அரசியல் வடிவம் கொடுத்ததென்பது கடந்தகால வரலாறு. ஒவ்வொரு மாநிலத்திலும், அந்த மாநிலத்திற்கான தனித்த பிரச்சினைகள் இருப்பதை யாராலும் மறுக்கவியலாது, காரணம் இந்தியா, என்பது பன்முகத்தன்மை கொண்டது. எனவே இயற்கையாகவும், இயல்பாகவும் ஆங்காங்கு வாழும் மக்களின் தேவைகள் வேறுபடும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதுமட்டுமல்ல ஜனநாயகத்தில், பல அரசியல் கட்சிகள், தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தாங்கள் ஏற்றுக்கொண்ட சித்தாந்த அடிப்படையில், தேவைகள் வேறுபடும்! என்பது இயல்பானதாகும்! இத்தகையபன்முகத்தன்மையை உறுதிப்படுத்தும் நிலையில்தான் மறைந்த பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்திய நாட்டின் ஒற்றுமை (Integretion) வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) என்று குறிப்பிட்டார். இந்த அடிப்படை உண்மையை எக்காலத்திலும், எந்தச் சூழ்நிலை யிலும், எந்தச் சட்டத்தாலும், மாற்றியமைத்திடவியலாது. ஆனால், மத்தியில் மூன்றாவது முறையாக ஆட்சியமைத்துள்ள பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர், “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற முழக்கத்தை முன்வைத்ததோடு, அதற்கென ஒரு குழுவினை முன்னாள் குடியரசுத் தலைவர் தலைமையில் அமைத்து, அதன் மூலம், ஓர் அறிக்கை யினைப் பெற்று “ஒரே நாடு ஒரே தேர்தல்” திட்டத்தை அமலபடுத்தும் முறையில் தீவிரம் காட்டிவருகிறார்கள்.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை
செயல்திட்டக்குழு உறுப்பினர்

இந்தத் திட்டம், நடைமுறைச் சாத்தியமில்லை என பல்வேறு அரசியல் சட்ட விற்பனர்கள் கருத்து தெரிவித்தாலும், ஒன்றிய அரசு அதனுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளத் தயாராகவில்லை. ஒன்றிய அரசின் இந்த முரட்டுப் பிடிவாதத்திற்கு என்ன காரணம்? இந்த “ஒரே நாடு ஒரே தேர்தல்” முழக்கத்திற்குப் பின்னால், வேறொரு மறைமுக அரசியல் நோக்கம் உள்ளது. தற்காலிகமாக இந்த மறைமுக நோக்கம் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற திரை மூலம் மறைக்கப்பட்டுள்ளது. அந்தத் திரை விளக்கப்படுமானால், தற்பொழுது அரசியல் சட்டத்தின் (Constitution of India) அடிப்படையில் அமல்படுத்திவரும் ஆட்சிமுறைக்கு மாற்றாக ஜனாதிபதி ஆட்சிமுறை (ஒற்றை நிர்வாக அரசு அமைப்பு) அமலாக்கம் தலைதூக்கும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. இந்த மறைமுகத் திட்டத்தின் வெள்ளோட்டம்தான் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற முழக்கமும், செயலாக்கமும் ஆகும். ஒன்றிய அரசின் கடந்த கால நிகழ்வு களும், நிகழ்ச்சிகளும் இந்த உள்நோக்கத்தை உறுதிப்படுத்தும் பாரதிய ஜனதாக் கட்சிக்கும் அதற்கு சித்தாந்த ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கும் ராஷ்டிரிய சுயம்சேவக் சங்க் (RSS) இயக்கத்திற்கும் இன்றைய அரசியல் சட்டம் வரையறுத்து வழங்கியிருக்கும் அமைச்சரவை ஆட்சி முறையில் (Cabinet system of government) நம்பிக்கையில்லாத அரசியல் அமைப்புகளாகும்.

எனவே, இந்த இயக்கங்கள் வலியுறுத்தும் ஆட்சிமுறையென்பது ஜனாதிபதி ஆட்சி முறைதான் (ஒற்றை நிர்வாக அரசு அமைப்பு) (Presidential form of government) இந்த ஆட்சிமுறைக்கு இந்திய அரசியல் சட்டத்தில் வழியும், வாய்ப்பும் இல்லாமையால் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற முழக்கத்தை முன்வைத்து தாங்கள் விரும்பிய ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு (ஒற்றை நிர்வாக அரசு அமைப்பு) வழித்தடம் அமைக்கும், உள்நோக்கம் கொண்டுதான் இந்த முயற்சியென தீர்க்கமாக அனுமானிக்க முடிகிறது. இந்த முயற்சியின் மூலம் தங்களின் திட்டமான “இந்துத்துவா” கோட்பாட்டின் அடிப்படையிலான “இந்துராஷ்டிரத்தை” உருவாக்கிடவும் திட்டமிடுகிறார்கள்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த உள்நோக்கத்தை அறிந்துதான், சென்னை ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெற்ற முப்பெரும் விழா நிகழ்ச்சியில், கழகத் தலைவர், முதல்வர் அவர்கள், மாநிலங்களுக்கு அவசியப்படும் அதிகமான அதிகாரங்கள் தேவை என்பதை வலியுறுத்தும் மாநிலசுயாட்சிக் கோரிக்கையை, தன்னுடைய உரையில் முத்தாய்ப்பாக பெரிதும் வலியுறுத்தினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் முன்மொழிந்து வடிவம் கொடுத்த மாநிலசுயாட்சியின் தேவையை, இந்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு மாநிலங்களும், பல்வேறு அரசியல் கட்சிகளும் உணரத் தொடங்கிவிட்டதை அறிய முடிகிறது. அதுமட்டுமல்ல இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு வலிமை சேர்த்து நிரந்தரமாக உறுதிப்படுத்தும் சக்தியும் ஆற்றலும் மாநிலசுயாட்சிக் கோட்பாட்டிற்குதான் உண்டு என்பதை இந்திய நாட்டு மக்கள் பெரிதும் உணர தொடங்கிவிட்டார்கள்.

எனவேதான் ஒன்றிய அரசு “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற திட்டத்தை செயல்படுத்துவதற்கு தயாராகி, அதற்கான அரசியல் சட்ட திருத்தங்களுக் கும் தயாராகி வருகிறது என்பதை அறியமுடிகிறது. இந்த முழக்கமும், செயல்லாக்கமும் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு (ஒற்றை நிர்வாக அரசு அமைப்பு) அமைக்கும் அரசியல் வழித்தடம்தான் என்பதை தொலைநோக்கு சிந்தனையால் உணர்ந்த முதல்வர் திராவிட மாடல் ஆட்சியின் வெற்றி நாயகனுமான தளபதியார் சரியான தடுப்பு நடவடிக்கையாக மாநிலசுயாட்சிக் கோரிக்கையை முப்பெரு விழா நிகழ்ச்சி உரையில் உயர்த்திப் பிடித்துள்ளார்.

எப்படி திராவிட மாடல் ஆட்சி, இந்திய முழுமையும், வழிகாட்டும் அரசியல் நெறியாகப் பயன்படுகிறதோ, அதுபோன்றுதான் மாநிலசுயாட்சியும் இந்திய நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக அமைவ தோடு, ஒன்றிய அரசால் அமல்படுத்தத் துடிக்கும் “ஒரே நாடு ஒரே தேர்தல்” என்ற நடைமுறைக்கு ஒவ்வாத திட்டத்தை தகர்த்து கூட்டாட்சியின் அடித்தளமான மாநிலசுயாட்சி மலர்வதற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. காலத்தால், தாங்கள் சரியான காலகட்டத்தில் உயர்த்திப்பிடித்த மாநிலசுயாட்சி கோரிக்கையின் பயன்களை உணரும் அனைத்து மாநில அரசுகளும், மக்களும், தங்களை குன்றின்மேலிட்ட விளக்காய் போற்றிப் பாராட்டும் காலம் வெகு தொலைவில் இல்லையென்பது மட்டுமல்ல, இந்திய நாட்டு வரலாறு காலமெல்லாம் வாழ்த்தும்.

## இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாட்டு மீனவர்களை விடுவித்திட சட்ட உதவிகள் வழங்கிடுவீர்!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, செப். 25-**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்கள் மீது அதிக அளவில் அபராதம் விதிப்பதைத் தடுத்திடவும், மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்கிடவும், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திடவும் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகாரைச் சேர்ந்த 37 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கடந்த 21.9.2024 அன்று சிறைபிடிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுத்திட நடவடிக்கை எடுக்குமாறும், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களிடம் அதிக அளவில் அபராதம் வசூலிப்பதைத் தடுத்திடவும், மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்கிடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (23.9. 2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 மீனவர்கள், INDTN16MO3451, INDTN16 MO1544 ஆகிய பதிவெண்களைக் கொண்ட இரண்டு படகுகள் மற்றும் பதிவு செய்யப்படாத ஒரு படகு என மூன்று படகுகளில் மீன் பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் கடந்த 21.09.2024 அன்று சிறை பிடிக்கப்பட்டுள்ளதாக ஆழ்ந்த வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

தான் ஏற்கனவே சுட்டிக் காட்டி ய படி, தமிழ்நாட்டு மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன்பிடிக்கும் போது, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக கவலை படத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், கைது செய்யப்படும் மீனவர்களிடம், அவர்களது சக்திக்கு மீறிய அபராதங்களை இலங்கை நீதிமன்றங்கள் விதித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அதோடு, மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் இலங்கை அதிகாரிகள் இதுபோன்று கைது செய்வதைத் தடுத்திட உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே, கைது செய்யப்படும் மீனவர்களிடம் அதிக அளவில் அபராதம் விதிப்பதைத் தடுத்திட இலங்கை அரசை வலியுறுத்த வேண்டுமென்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்கிடவும், சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



மயிலாடுதுறை மாவட்ட செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் முப்பெரும் விழா பொதுக்கூட்டம் திருக்கடையூர் சன்னதிதெருவில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுகல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம். சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து.மகேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் அமுர்தவிஜயகுமார், பி.எம்.அன்பழகன், மங்கை எம்.சங்கர், என்.இளையபெருமாள், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்ட பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மற்றும் பலர் உள்ளனர்.



கழக பவள விழாவை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் ஒன்றியம் ஆறகளூர் ஊராட்சியில் கழக இரு வண்ண கொடியேற்றி இனிப்புகளை மத்திய ஒன்றிய செயலாளர் சாத்தப்பாடி மணி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. குணசேகரன், மாவட்ட பிரதிநிதி மு.தேவேந்திரன், ஒன்றிய துணை செயலாளர் சார்வாய் கிருஷ்ணன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் கண்ணுசாமி, அன்புமணி, கிளை கழக செயலாளர் அ.ஜெயராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க விற்கு மாணவர்அணிக்கு நிர்வாகிகள் தேர்வு மாவட்டக் கழகச் செயலாளர். இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. உடன் சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர். எஸ்.ஆர். சிவலிங்கம். சேலம் மேற்கு மாவட்ட செயலாளர். டி. எம். செல்வ கணபதி. எம்.பி. மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன் துணைச்செயலாளர்கள். ஆனந்த். வீரமணி, இரா.தமிழரசன். சேலம் மத்திய மாவட்ட அமைப்பாளர் ஆர். கே.குல்தாஸ் ஆகியோர் இருந்தனர்.